# வாக்களிப்பு இடத்திற்குச் செல்ல முடியவில்லையா?



## 2020 பொதுத்தேர்தல் மற்றும் பொது வாக்கெடுப்புகளில் வாக்களித்தல்

2020 பொதுத் தேர்தல் தற்போது End of Life Choice மற்றும் கஞ்சா பொது வாக்கெடுப்புகளுடன் சேர்த்து அக்டோபர் 17ஆம் தேதியன்று நடத்தப்படும். பொதுத் தேர்தல் மற்றும் பொது வாக்கெடுப்புகளில் அக்டோபர் 3 சனிக்கிழமை முதல் எந்தவொரு முன்கூட்டிய வாக்களிப்பு இடத்திலும் அல்லது தேர்தல் நாளான, அக்டோபர் 17 சனிக்கிழமை எந்தவொரு வாக்களிப்பு இடத்திலும் நீங்கள் வாக்களிக்கலாம்.

**மேலும் தகவல்களை இதிலிருந்து பெறலாம்:**

- **vote.nz** ஐப் பாருங்கள்
- **0800 36 76 56** என்ற எண்ணை அழையுங்கள்

## Complete this form to authorise someone to collect voting papers on your behalf

**Voter's details. Please print clearly**

My first name(s) are:

My last name is:

My contact telephone number is:

OFFICIAL USE ONLY:
Index reference

Address where I am enrolled to vote:

✓ Tick the electoral roll you believe you are enrolled on:

☐ General roll ☐ Māori roll

## வாக்களிப்பு இடங்களில் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகள்

2020 பொதுத் தேர்தலானது COVID -19 காரணமாக வித்தியாசமானதாக இருக்கும். உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் பாதுகாக்கும் பொருட்டு, கை சுத்திகரிப்பான் மற்றும் உடல்சார் இடைவெளி உட்பட்ட செயல்முறைகளை நடைமுறைப்படுத்துகிறோம்.

## உங்களால் முடியுமெனில், முன்னதாகவே வீட்டிற்கு அருகில் வாக்களிக்கவும்

அக்டோபர் 3 சனிக்கிழமை முதல் அக்டோபர் 16 வெள்ளிக்கிழமை வரை எந்தவொரு முன்கூட்டிய வாக்களிப்பு இடத்திலும் வாக்களிக்கலாம். தேர்தல் நாளான அக்டோபர் 17ஆம் தேதி அன்று, அனைத்து வாக்களிப்பு இடங்களும் காலை 9.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை திறந்திருக்கும்.

வாக்களிப்பை விரைவாக்கவும் எளிதாக்கவும் வீட்டிற்கு அருகில் வாக்களிக்கவும்.  நீங்கள் Aotearoa இல் உள்ள எந்தவொரு வாக்களிப்பு இடத்திலும் வாக்களிக்கலாம், ஆனால் உங்கள் தேர்தல் தொகுதிக்கு வெளிப்புறத்தில் வாக்களித்தால், நீங்கள் ஒரு கூடுதல் படிவத்தை நிரப்ப வேண்டியிருக்கலாம்.

எங்கே மற்றும் எப்போது வாக்களிப்பது என்பது பற்றிய தகவல்களை **vote.nz** என்ற தளத்திலோ **0800 36 76 56** என்ற எண்ணை அழைப்பதன் மூலமோ பெறலாம்.

## வாக்களிப்பு இடத்திற்குச் செல்ல முடியாவிட்டாலும் நீங்கள் வாக்களிக்கலாம்.

வாக்களிப்பு இடத்திற்குச் செல்ல முடியாதவர்களுக்கு நாங்கள் வாக்களிப்புச் சேவைகளை வழங்குகிறோம், எடுத்துக்காட்டாக, நோய், வயது அல்லது இயலாமை காரணமாக வரமுடியாதவர்கள். 2020 ஆம் ஆண்டில், உங்களால் உடல்நிலை சரியில்லாததால் அல்லது நடமாட முடியாததால் வாக்களிப்பு இடத்திற்குச் செல்ல முடியாவிட்டால், நீங்கள் தபால் வாக்களிப்பிற்காக விண்ணப்பிக்கலாம் அல்லது உங்களுடைய வாக்குச்சீட்டுகளை யாராவது கொண்டுவரும்படி கேட்கலாம்.

## உங்களுடைய வாக்குச்சீட்டுகளைச் சேகரிக்கும்படி யாரையாவது கேளுங்கள்

இணைக்கப்பட்டுள்ள படிவத்தை நிரப்பி கையொப்பமிட்டு, வாக்களிப்பு இடத்திற்கு யாராவது கொண்டுவரும்படி கேளுங்கள். பின்னர் நிரப்புவதற்காக உங்களுடைய வாக்குச்சீட்டுகளை அவர்கள் திரும்பக் கொண்டு வருவார்கள். உங்களுடைய வாக்குச்சீட்டுகளை அக்டோபர் 17 சனிக்கிழமை இரவு 7.00 மணிக்கு முன் வாக்களிப்பு இடத்தில் திருப்பியளிக்க வேண்டும்.

## தபால் வாக்களிப்பிற்காக விண்ணப்பிக்கவும்

**0800 36 76 56** என்ற எண்ணை அழைப்பதன் மூலம் செப்டம்பர் 23 வரை தபால் வாக்குச்சீட்டுகளுக்கு விண்ணப்பிக்கலாம். நீங்கள் எங்களை அழைப்பதற்கு முன் நீங்கள் பதிவுசெய்ய வேண்டும்.

தபால் வாக்குத் தொகுப்புகள் அக்டோபர் 3 சனிக்கிழமையிலிருந்து அக்டோபர் 9 வெள்ளிக்கிழமைக்குள் வந்தடையும்.

நிரப்பப்பட்ட தபால் வாக்குகளை அக்டோபர் 14 புதன்கிழமைக்குள் அஞ்சல் செய்திருக்க வேண்டும், எனவே அவை வாக்குகள் கணக்கிடப்பட வேண்டிய நேரத்தில் எங்களை அடையும் அல்லது தேர்தல் நாளான அக்டோபர் 17 சனிக்கிழமை அன்று இரவு 7.00 மணிக்குள் வாக்களிப்பு இடத்தில் உங்களுடைய வாக்குச்சீட்டுகளை அளிக்குமாறு யாரையாவது நீங்கள் கேட்கலாம்.

## தேர்தல் நாளில் வேலை செய்கிறீர்களா?

தேர்தல் நாளில் சென்று வாக்களிக்க வேலை நேரத்தில் இடைவேளை எடுப்பதற்கு உங்களுக்குச் சட்டப்பூர்வமான அனுமதி உண்டு. அக்டோபர் 3 சனிக்கிழமை முதல் எந்த வாக்களிப்பு இடத்திலும் நீங்கள் முன்னதாகவே வாக்களிக்கலாம்.

## நீங்கள் ஓய்வில்லத்தில் இருந்தாலும் வாக்களிக்கலாம்

நீங்கள் ஓய்வில்லத்தில் இருந்து, வாக்களிப்பு இடத்திற்குச் செல்ல முடியாவிட்டால், நீங்கள் எங்களைத் தொடர்புகொள்ளத் தேவையில்லை. வாக்களிப்புச் சேவைகளை ஏற்பாடு செய்வதற்கு உங்களுடைய உள்ளூர் தேர்தல் பொறுப்பதிகாரி உங்கள் ஓய்வில்லத்தின் மேலாளரைத் தொடர்புகொள்வார்.

## நீங்கள் மருத்துவமனையில் இருந்தாலும் வாக்களிக்கலாம்

நீங்கள் மருத்துவமனையில் இருப்பதனால் வாக்களிப்பு இடத்திற்குச் செல்ல முடியாவிட்டால், அக்டோபர் 3 முதல், உங்களுடைய வாக்குச்சீட்டுகளை ஒரு நண்பர் அல்லது குடும்ப உறுப்பினர் உங்களுக்காகக் கொண்டுவரலாம். தேர்தல் நாளுக்கு முன்பாக நீங்கள் மருத்துவமனைக்குச் செல்லத் திட்டமிட்டிருந்தால், உங்களால் முடிந்தால் அக்டோபர் 3ஆம் தேதியிலிருந்து முன்கூட்டியே வாக்களிப்பது நல்லது.

## நீங்கள் நிர்வகிக்கப்பட்ட தனிமைப்படுத்துதல் அல்லது கட்டுப்படுத்துதலில் இருந்தாலும் வாக்களிக்கலாம்

நீங்கள் எங்களைத் தொடர்புகொள்ளத் தேவையில்லை. நிர்வகிக்கப்பட்ட தனிமைப்படுத்துதல் அல்லது கட்டுப்படுத்துதலில் உள்ளவர்களுக்கு வாக்களிப்புச் சேவைகளை வழங்குவதற்கு மேலாளருடன் நாங்கள் பணியாற்றுவோம்.

# Give my voting papers to the person I have authorised.

**The name of the person I have authorised to collect and deliver my voting papers to me is:**

___

✓ ☐ **I have been authorised to collect and deliver voting papers to the voter named on this form.**

| Signature of authorised person | Date |
|---|---|
| | |

| Signature of voter | Date |
|---|---|
| | |

**Note: this application must be signed for it to be valid**

ELECTORAL COMMISSION
TE KAITIAKI TAKE KŌWHIRI